## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

# திருக்குறுந்தாண்டகம்

2032. எம்பெருமான் நினைத்தபோது பயன்படுத்திக்கொள்ளும் நிதி போன்றவன், அனைவரையும் தாங்கும் பவளத் தூண் போன்றவன். இவனை முறைப்படி நினைக்க வல்லவர்க்கு பரமகதி ஆவான். கம்சனை அழித்து உலகைக் காப்பாற்றியவன். தனது அன்பர்களை நினைப்பவன். தனது அன்பரிடம் மோகம் கொள்பவன். இவனை வாழ்த்தி வணங்குமாறு என் மனத்தில் வந்த கருணை உடையவன். இவனைக் கண்ணாரக் கண்டு அனுபவித்த அடியேனான நான் இனி ஒருபோதும் இவனை விடமாட்டேன்.

2033. எனது நெஞ்சே! பெருமான் காற்று, நீர், நெருப்பு ஆகிய வற்றுக்கு உயிராக இருக்கிறான். இலங்கையை அழித்த காளை போன்ற செருக்குடையவன். இமய மலையினுள் (திரிப்பிரிதியில்) எழுந்தருளி இருக்கும் அழகிய மணிவரிசை போல் இனியவனாய் இருக்கிறான். ஆனந்த வெள்ளமாயும், கண்ணால் பருகும் அமுதமாயும் இருக்கிறான். இரணிய னுடைய அரிய உயிரைப் பருகிய யமனாய் இருக்கிறான். அவனது குணங் களை நினைத்து நீ புகழ்ந்துபாடு. என்ன பாக்கியம் இது!

2034. அகலமும், ஆழமுமுடைய திருப்பாற்கடலில் பெரிய மந்தர மலையை நட்டுச் சுழலும்படி கடைந்து தேவர்களுக்காகத் தன்னை ஆக்கி வைத்து அமுதத்தை அவர்களுக்குக் கொடுத்த உபகாரகன் எனக்கு அமுதமாய் இருப்பவனாவான். உயர்ந்த மூங்கில் புதர்களால் சூழப்பெற்று விரிந்த கிரணங்களை உடைய சூரியன் மலையின்மேல் மரங்களின் நிழலால் கிரணங்கள் படாதவாறு விலகித் திரியும் படியான திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளி இருக்கும் இப்பெருமானை நான் வணங்கினேன்.

2035. பெருமானே! நான் தேவரீரை ஒன்று கேட்க விரும்புகிறேன். அதை அருளிச் செய்ய வேண்டும். வராக ரூபியாய் பூமிப்பிராட்டியை எடுத்து வந்த மலர்போல மென்மையுடைய தேவரீரை என் நெஞ்சில் நன்றாக அனுபவித் தேன். மொழி, மெய், மனம் என்னும் முக்கரணங்களாலும், சிரத்தையாலும் ஆசையானது அதிகரிக்க இதர விஷயங்களை அனுபவிக்கப் பெற்ற எனக்கு பகவத் விஷயம் இனிதாய் இருந்ததே. இது எவ்வாறு?

2036. நன்றாக பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஏற்கும் தண்ணீர்போல எம்பெருமானிடம் என்னுடைய கிடைத்தற்கரிய அன்பை வைத்து அவனுக்கு அடிமை செய்து உயிர் தரிக்கப் பெற்றேன். (யான் இருக்குமிடம் தேடி) வந்த மேகம் போன்ற தன்மை உடையவனை அணுகி என் மனத்திலே பொருந்த வைத்து கரும்பின் சாறு போலே பருகிய எனக்கு அவன் இனியனாய் இருந்தது என்ன ஆச்சர்யம்?

2037. (பிரமன், சிவன், இந்திரன் ஆகிய) மூவருக்கும் காரணமாயிருக்கும் ஒப்பற்றவன் பெருமான். மாவலியிடம் உலகத்தைத் தானம் வாங்கிக் கொண்ட உலக நாயகன். திருக்குடந்தையிலே பொருந்தி இருக்கும் சிறந்த நீல இரத்தினத் திரள் போன்றவன். இன்பமயமான பாட்டுப்போல செவிக்கு இனியனாய் இருப்பவன். தேன் போல நாவால் பாராட்டுவதற்கு இனியவன். பொன்போல அனைவராலும் விரும்பப்படுபவன். நித்திய சூரிகளின் தலையில் அணியத்தக்க மலர்போன்றவன். இவ்வாறான எம்பெருமானைப் புகழும் அடியவர்கள் எதைச்சொல்லி புகழ்வர்?

2038. இவ்வுலகில் அனுபவிக்குமாறு சிறந்த அறிவைத் தருபவன் உடல் அழிந்தபின் மோட்சத்தில் கைங்கர்யத்தைத் தருபவன். சோலைகளால் சூழப்பெற்று வியக்கத்தக்க திருவரங்கத்திலே என்றும் வாழ்பவன். ஒரு யுகத்தில் சிவந்த வடிவும், அடுத்த யுகத்தில் கறுத்த வடிவுமுடையவன். திருவேங்கடத்தில் நின்று நித்ய சூரிகளுக்கும், நித்திய சம்சாரிகளுக்கும் வேறுபாடு காணாமல் ஒக்க முகம் காட்டுபவன். அடியார்களுக்கு வசப்பட்டிருப்பவன். இத்தகைய இயல்புடைய இப்பெருமானை நினைக்க வல்லவரே என் தலையில் அணிகலனாக இருக்கத் தக்கவர்.

2039. வானத்தில் இருக்கும் மழைக்கால மேகம் போன்ற வடிவு உடையவன், அடியாரிடம் அன்புடையவன்; மலையிலே தேனீக்களால் சேர்க்கப்பட்ட தேன் வெள்ளத்தின் நடுவில் வளர்ந்த கரும்பின் சாறுபோல் இனிமையானவன்; திருவுக்குத் திருவாய் இருப்பவன்; இப்படிப்பட்ட பெருமானோடு பொருந்தி வாழாதவர் மனிதப் பிறவியைப் பெறுதற்கு அரியது என நினைக்காமல் இருக்கிறார்கள். இது உறுதி. ஐயோ! மாமிசத்தாலான தங்கள் உடலில் வாழ்வதற்கு உறுதியே தேடி ஓடுகின்றார்களே!

2040. என் மனமோ எதிலும் நிலைநில்லாமல் இருக்கும். நெருப்பானது ஓசையுடன் பொருந்தி நின்று எரிகின்ற கொள்ளிக் கட்டையின் மேலுள்ள எறும்பு போல என் மனம் பிறப்பு இறப்புகளை நினைத்து உளைகின்றது. அந்தோ! தெளிவுடையவரே! தேவர்களுக்கெல்லாம் தேவராகி உலகை மாவலியிடமிருந்து பெற்ற ஒளியுடையவரே! உம்மைத் தவிர எந்த நிலையிலும் நாங்கள் துணை இல்லாமல் இருக்கிறோம்.

2041. உன் திருவடிகளிலே என் மனம் தரித்து நிற்பதில்லை. (உன்னை நின்று அனுபவிக்க முடியாத) பாவத்தைச் செய்த அடியேன் என்ன செய்வேன்? உன்னிடம் அளவிறந்த பக்தி கொள்ளும்படி அளவுடைய அன்புடையவனாகும் படி நீயே செய்ய வேண்டும். என் சுவாமியே! முத்துப் போல் குளிர்ந்தும் மரகதம் போல நிறமுடையதாயுமுள்ள திருமேனி உடையவனே! முழங்கும் ஒளி கொண்ட மேகம் போன்ற நிறத்தை உடையவனே! என் தலைவனே! உனக்குக் கைங்கர்யம் செய்வது தவிர வேறொன்றையும் நான் அறியேன்.

2042.

துன்பம்தானே.

## ஏழாம் திருமொழி - ஆலை நீள் கரும்பு

### யசோதை பெற்ற இன்பத்தைத் தான் பெறாதது பற்றி தேவகி வருந்துதல்

708. *ஆலை நீள் கரும்பு அன்னவன் தாலோ!
அம்புயத் தடங் கண்ணினன் தாலோ!
வேலை நீர் நிறத்து அன்னவன் தாலோ!
வேழப் போதகம் அன்னவன் தாலோ!
ஏல வார் குழல் என் மகன் தாலோ!
என்று என்று உன்னை என் வாயிடை நிறையத்
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத்
தாயாரில் கடை ஆயின தாயே.

709. வடிக் கொள் அஞ்சனம் எழுது செம்மலர்க்கண்
மருவி மேல் இனிது ஒன்றினை நோக்கி,
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள்
பொலியும் நீர் முகில் குழவியே போல,
அடக்கி யாரச் செஞ் சிறுவிரல் அனைத்தும்
அங்கையோடு அணைத்து, ஆனையிற் கிடந்த
கிடக்கை கண்டிடப் பெற்றிலன், அந்தோ!
கேசவா! கெடுவேன், கெடுவேனே!

710. முந்தை நன்முறை அன்பு உடை மகளிர்
முறை முறை தம் குறங்கிடை இருத்தி,
எந்தையே! என்தன் குலப் பெருஞ் சுடரே!
எழு முகில் கணத்து எழில் கவர் ஏறே!
உந்தை யாவன்? என்று உரைப்ப, நின் செங்கேழ்
விரலினும் கடைக்கண்ணினும் காட்ட,
நந்தன் பெற்றனன்; நல்வினை யில்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே!

கண்ணபிரானது பிள்ளைத் திருவிளையாடல்களை கண்டு களிக்கும்போது ஆயர்பாடி யசோதைப் பிராட்டியார்க்கு வாய்த்தது போலத் தனக்கு வாய்க்காமையை நினைத்துப் பெற்ற தாயான தேவகிப் பிராட்டியார் அப்பெருமானைக் கண்டபோது கழிவிரக்கத்தோடு கூடிய பேச்சாகப் புலம்பி மொழிந்த போக்கில் அமைந்துள்ளன இத்திருமொழிப் பாசுரங்கள். தாலாட்டுப் பாட்டு என்ற அமைப்பில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. பிள்ளைத் தமிழில் தாலப் பருவம் என்பதொன்றாகும்.

முடிகிறது.

708. ''ஆலையிலிட்டு ஆடத் தகுந்த நீண்ட கரும்பு போன்ற கண்ணனே! உனக்குத் தாலாட்டு. தாமரை போன்று விரிந்தகன்ற திருக்கண்களை உடையவனே! தாலேலோ. கடலின் நிறம் போன்ற நிறத்தை உடையவனே, தாலேலோ. யானைக் குட்டி போன்றவனே தாலேலோ. நறுமணம் மிக்க நீண்ட குழலையுடைய என் மகனே! தாலேலோ. இவ்வாறு பலகாலுஞ் சொல்லி என் வாய் திருப்தியடையும் படி உன்னைத் தாலாட்டும் செல்வமில்லாத தாய்மார்களில் கடையான தாயாய் இருக்கின்றேன்'', என்று தேவகி புலம்பினாள்.

709. ''கூர்மையையுடைத்தாய் மையிடப் பெற்றதாய் செந்தாமரை மலரையொத்தான கண்களாலே தொட்டிலின் மேல்கட்டியிலே தொங்க விட்டிருக்கும். கிளி முதலியவற்றில் ஒரு பொருளை இனிதாகப் பொருந்தப் பார்த்துக் கொண்டும், கறுத்த புறந்தாளையுடையதும், செந்தாமரை மலரையொத்துச் சிறுத்த சிவந்த அகவாயை உடையதுமான திருவடிகளை முடக்கிக் கொண்டும், பருகின நீர் விளங்கப் பெற்ற மேகக்குட்டிபோல அழகிய சிறுத்த திருவிரல்கள் எல்லாவற்றையும் உள்ளங்கையிலே அடங்கும்படி முடக்கிப் பிடித்துக்கொண்டும், ஓர் யானை கிடக்குமா போலே பள்ளி கொண்டருளும் அழகைக் கண்டு அனுபவிக்கப் பெறாத பாவியானேன்; ஐயோ! கண்ணபிரானே! ஒன்றும் துய்க்கப் பெறாத பெரும் பாவியானேன்'' என்று தேவகி புலம்பினாள்.

710. ''அன்பு சுரக்கப் பெற்றவர்களான பரம்பரையாக வருகிற நல்ல உறவு முறையை உடைய பெண்கள் தங்கள் தங்கள் தொடைகளிலே முறை முறையே வைத்துக் கொண்டு, 'என் அப்பனே! எங்கள் குலத்துக்கு ஒப்பற்றதொரு விளக்கானவனே! கருமேகத்தின் அழகைக் கொண்ட காளை போன்றவனே! என்று இவ்வாறு பலவாகத் துதித்து, 'உன் தந்தையார் யார்? காட்டு என்ற அளவிலே உன்னுடைய சிவந்த சிறந்த விரலினாலும், கடைக் கண்ணாலும் இன்னார் என் தந்தையார் என்று காட்ட, அந்தப் பேற்றினை நந்தகோபர் பெற்றார். நல்வினையில்லாத என்னுடைய பதியான வசுதேவர் (நந்தகோபர் பெற்ற பேற்றினைப்) பெறவில்லையே'' என்று தேவகி புலம்பினாள்.

711. களி நிலா எழில் மதிபுரை முகமும்,
கண்ணனே! திண்கை மார்வும், திண் தோளும்,
தளிர் மலர்க் கருங் குழற் பிறையதுவும்,
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த
இளமை இன்பத்தை இன்று என்தன் கண்ணால்
பருகுவேற்கு இவள் தாயென நினைந்த
அளவில் பிள்ளைமை - இன்பத்தை இழந்த
பாவியேன் எனது ஆவி நில்லாதே!

712. மருவும் நின் திரு நெற்றியில் சுட்டி
அசைதர, மணிவாயிடை முத்தம்
தருதலும் உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டு கொண்டு உள்ளம் உள் குளிர
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
வெகுளியாய் நின்று உரைக்கும் அவ் உரையும்
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே.

713. தண் அந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்து எழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி ஆடி வந்து என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன்; அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன்; ஓ! கொடு வினையேன்!
என்னை என் செய்யப் பெற்றது எம் மோயே!

714. குழகனே! என் தன் கோமளப் பிள்ளாய்!
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி,
ஒழுகு பேர் எழில் இளஞ்சிறு தளிர் போல்
ஒரு கையால் ஒரு முலை - முகம் நெருடா,
மழலை மென்னகை இடையிடை அருளா
வாயிலே முலை இருக்க, என் முகத்தே
எழில் கொள் நின் திருக் கண்ணினை நோக்கந்
தன்னையும் இழந்தேன், இழந்தேனே!

711. ''கிருட்டிணனே! மகிழ்வூட்டும் கதிர்களையுடைய முழு மதியினை ஒத்த திருமுகமும், திண்ணியதான திருக்கைகளும், திருமார்பும், வலிமை பொருந்திய திருத்தோள்களும், தளிரையும், அட்டமி சந்திரன் போன்ற திருக்கண்களும் ஆகிய இவை அழகு பெற்று விளங்கும்படியான இளமை பொழியும் இன்பத்தை இப்போது என்னுடைய கண்ணாலே நான் அனுபவியா நின்றாலும், இவள் என்னுடைய தாய் என்று நினைப்பதற்குத் தகுதியான பிள்ளைமைப் பருவத்திலுண்டான அளவற்ற மகிழ்ச்சியினை அனுபவிக்கப் பெறாமல் இழந்த பாவியான என்னுடைய உயிரானது தடுத்து நிற்க வழி இல்லையே'' என்று தேவகி புலம்பினாள்.

712. ''உன்னுடைய திருநெற்றியிலே பொருந்தி இருக்கிற சுட்டியானது அசையும்படி, அழகிய வாயிலுண்டான முத்தத்தைக் கொடுப்பதென்ன, உன்னுடைய தந்தையாரைப் போன்ற உன் வடிவழகை நான் பார்த்து என் அகமானது குளிரும்படி சிவந்த சிறிய திருவாயிலே விரல்களை வைத்துக் கொண்டு நீ சீற்றத்தோடு சொல்லுகிற மழலைச் சொற்களென்ன, ஆகிய இவற்றிலே ஒன்றையும் பேறு அற்றவளான நான் அனுபவிக்கப் பெற வில்லை. தெய்வ நங்கை என்று சொல்லும்படியான யசோதைப் பிராட்டி அந்தப் பிள்ளைத் திருவிளையாடல்கள் எல்லாவற்றையும் அனுபவிக்கப் பெற்றாளே'' என்று தேவகி புலம்பினாள்.

713. ''குளிர்ந்த அழகிய தாமரை போன்ற திருக்கண்களை உடைய வனே! கண்ணபிரானே! நீ தவழ்ந்து கொண்டு எழுந்திருப்பது, தட்டுத் தடுமாறி நடப்பதாகிற ஒரு நடையினால் சிவந்த புழுதி மண்ணிலே விளை யாடி, அக்கோலத்தோடு வந்து என்னுடைய மார்பிலே நீ அணையும்படி யான பேற்றினை யான் பெற்றிலேன். அந்தோ! அழகு பெற்றுச் சிவந்து சிறிதான கைவிரல்கள் எல்லாவற்றாலும் வாரிக்கொண்டு அமுது செய்த உணவினுடைய மிச்சத்தை நான் உண்ணப் பெறவில்லை. இவற்றை எல்லாம் இழக்கும்படியான பாவத்தை யான் செய்தவளாவேன். ஐயோ! என் தாயானவள் என்னை எதற்காகப் பெற்றாளோ'' என்று கழிவிரக்கத் தோடு தேவகி புலம்பினாள்.

714. ''எல்லாரோடும் கலக்கும் இனிய சுபாவம் உள்ளவனே! என் வயிற்றில் பிறந்த அழகிய குமாரனே! கோவிந்தனே! என்னுடைய குடங்கையிலே பொருந்தியிருந்து ஒழுகுகின்ற மிக்க அழகையுடையதாயும் மிகவும் இளைய தான தயிர் போன்றதுமான திருக்கை ஒன்றாலே என்னுடைய ஒரு முலைக் காம்பை நெருடிக்கொண்டு மற்றொரு முலையானது உன் மணி வாயில் இருக்க, நடு நடுவே என் முகத்தை நோக்கிப் புன்சிரிப்பை உதிர்த்துக் கொண்டு, அழகிய உன் இரண்டு கண்களாலும் பார்க்கிற பார்வையும் ஐயோ! நான் இழந்தேனே'' என்று தேவகி புலம்பினாள்.

715. முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டு உண்ணும்
முகிழ் இளஞ் சிறுத் தாமரைக் கையும்,
எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கும்
நிலையும், வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்,
அழுகையும், அஞ்சி நோக்கும் அந் நோக்கும்,
அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும்,
தொழுகையும்; இவை கண்ட அசோதை
தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே.

716. குன்றினால் குடை கவித்ததும், கோலக்
குரவை கோத்ததும், குட மாட்டும்,
கன்றினால் விளவு எறிந்ததும், காலால்
காளியன் தலை மிதித்ததும், முதலா
வென்றி சேர் பிள்ளை நல் விளையாட்டம்
அனைத்திலும் அங்கு என் உள்ளம் உள் குளிர,
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன்; அடியேன்
காணுமாறு இனி உண்டெனில், அருளே.

717. வஞ்சம் ஏவிய நெஞ்சு உடைப் பேய்ச்சி
வரண்டு நார் நரம்பு எழக் கரிந்து உக்க
நஞ்சம் ஆர் தரு சுழிமுலை, அந்தோ!
சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய்!
கஞ்சன் நாள் கவர் கருமுகில் எந்தாய்!
கடைப்பட்டேன் வறிதே முலை சுமந்து,
தஞ்ச மேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன்
தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே!

718. *மல்லை மா நகர்க்கு இறையவன் தன்னை
வான் செலுத்தி வந்து ஈங்கு அணை மாயத்து
எல்லையில் பிள்ளை செய்வன காணாத்
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல்
கொல்லி காவலன் மால் அடி முடிமேல்
கோலமாம் குலசேகரன் சொன்ன
நல்லிசைத் தமிழ் மாலை வல்லார்கள்
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே.

715. ''வெண்ணெயைக் குடத்திலுள்ள அளவும் கையை விட்டு அளைந்து, எடுத்து உண்கிற இளந்தளிரையும் தாமரையையும் போன்ற சிறிய திருக்கைகளும் அழகிய தாம்பாலே அடிக்க, அதற்கு அஞ்சி நிற்கும் நிலையும், வெளுத்த தயிர் பூசிய சிவந்த வாயும், அழுவதும், பின் பயந்து பார்க்கிற அப்பார்வையும், அழகிய சிவந்த சிறிய வாய் துடிப்பதும், தொழுதல் செய்கிறதும் ஆகிய இவற்றையெல்லாம் நேரில் கண்ணாற் கண்டு அனுபவித்த யசோதையானவள் பேரானந்தத்தின் எல்லையைக் காணப் பெற்றாள்'' என்று தேவகி மொழிந்தனள்.

716. ''கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கி நின்றதும், அழகாகக் குரவையாடியதும், குடக் கூத்தாடியதும், கன்றாய் வந்த ஓர் அசுரனைக் கொண்டு, விளாமரமாய் நின்ற அசுரன் மீது எறிந்து விளாங்காய்களை உதிர்த்ததும், திருவடி கொண்டு காளிங்க நர்த்தனம் செய்ததும், ஆகிய இவை முதலாகவுள்ள வெற்றி பொருந்திய அழகிய பிள்ளை விளையாட்டுகள் எல்லாவற்றுள்ளும், ஒரு விளையாட்டினையும் என் நெஞ்சு குளிரும்படி நான் நீ அப்பிள்ளைமை விளையாட்டை நிகழ்த்திய இடத்தில் கண்ணாரக் கண்டு களிக்கப் பெற்றிலேன். இப்போது அவற்றை நான் காணத்தக்க வழி இருக்குமாகில் அதனை நீ அருளல் வேண்டும்'' என்று கேட்கிறாள் தேவகி.

717. ''வஞ்சனை பொருந்திய நெஞ்சையுடையவளான பூதனையானவள் உடம்பு வற்றவும். உடம்பிலுள்ள குருதி வெளியில் கொழிக்கும் படியாக வும், நார் போன்ற நரம்புகள் கருகி உதிரும்படியாகவும், அவளுடைய நஞ்சு தோய்ந்த கள்ளமுலையை நீ சுவைத்தும், என்மேல் கொண்ட அருளாலே உயிருடன் வளரப்பெற்றாய். அந்தோ! கம்சனுடைய ஆயுளைக் கட்டழித்த காளமேகம் போன்ற எந்தாய்! நான் முலையை வீணே சுமந்து கெட்டவ ரிலும் கடை கெட்டவளானேன்; உன்னையொழிய வேறு புகலிடம் ஏதும் இரா நின்றேன். என்றைக்காகிலும் உன்னைக் கண்ணால் காண்போமென்று உயிரைப் பிடித்துக் கொண்டு (நிற்கிறேன்) உயிர்க்கிறேன். உனக்குத் தகுதி யான நல்ல தாயாரை நீ தேடிக் கொண்டாய்'' என்று தேவகி புலம்பினாள்.

718. ''செல்வம் நிரம்பிய பெரிய நகரமாகிய வட மதுரைக்குத் தலைவனா யிருந்த கம்சனை வென்று வேற்றுலகுக்கு அனுப்பிவிட்டு, இங்கே (தேவகியிடம்) வந்து சேர்ந்த கண்ணனின் மாயம் நிறைந்த எல்லையற்ற பிள்ளைமை விளையாட்டுகள் நிகழ்ந்த காலையில் காணப்பெறாத தெய்வத் தன்மை பொருந்திய தேவகியானவள் புலம்பிக் கொண்டு சொன்ன பாசுரங் களைக் கொல்லி நகர்க்கு அரசராய், திருமாலின் திருவடிகளைத் தம் திருமுடிக்குப் புனைந்துள்ளவருமான குலசேகராழ்வார் அருளிச்செய்த நல்ல இசையையுடைய தமிழினாலாகிய சொல் மாலையை ஓதவல்லவர்கள் விரைவாக வைகுந்தத்தைச் சேரப்பெறுவர். இவ்வாறு இத்திருமொழி முடிகிறது.

# திருச்சந்த விருத்தம்

திருமழிசையாழ்வார் திருவாய் மலர்ந்தருளியது திருச்சந்த விருத்தம். இவர் உருவின வாளை உறையிலிடாதே ஸ்ரீமந் நாராயணனே பரம் பொருள் என்று பரதத்துவ நிர்ணயம் செய்து பெருமை பெற்றவர். ஸ்ரீமந் நாராயணனைத் தவிர மற்ற தெய்வங்களை நாடுவதால் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, உலகோர் உண்மைப் பொருளை அறிந்து உய்யத் திருச்சந்த விருத்தம் என்னும் பிரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

752. *பூ நிலாய ஐந்துமாய்ப், புனற்கண் நின்ற நான்குமாய்த்
தீ நிலாய மூன்றுமாய், சிறந்த கால் இரண்டுமாய்,
மீ நிலாயது ஒன்றும் ஆகி, வேறுவேறு தன்மையாய்,
நீ நிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே?

753. ஆறும் ஆறும் ஆறுமாய், ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
ஏறு சீர் இரண்டும் மூன்றும் ஏழும் ஆறும் எட்டுமாய்
வேறு வேறு ஞானம் ஆகி, மெய்யினோடு பொய்யுமாய்
ஊறொடு ஓசையாய ஐந்தும் ஆய ஆய மாயனே!

754. ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி அல்லவற்று உளாயுமாய்,
ஐந்தும் மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே!
ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி அந்தரத்து அணைந்து நின்று,
ஐந்தும் ஐந்தும் ஆய நின்னை யாவர் காண வல்லரே?

# திருச்சந்த விருத்தம்

752. எம்பெருமானே! நீ பூமியில் உள்ள குணங்கள் ஐந்துமாய் இருக்கிறாய். நீரிலுள்ள குணங்கள் நான்குமாய் இருக்கிறாய். நெருப்பிலுள்ள குணங்கள் மூன்றுமாய் இருக்கிறாய். பலம் மிக்க காற்றில் இரண்டு குணங்களாய் இருக்கிறாய். ஆகாயத்திலே ஒரு குணமாய் இருக்கிறாய். இப்படிப் பஞ்ச பூதங்களும், அவற்றின் குணங்களும் நீ இட்ட வழக்காக இருக்கின்றன. மேலும் நீ ஒன்றுக்கொன்று வேறுபாடான தேவாதி பதார்த்தங்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறாய். இப்படி உயிர்ப் பொருள்களுக்கும் (சித்து), உயிரல்லாத பொருள்களுக்கும் (அசித்து) ஆத்மாவாய் இருந்தும் அவற்றின் குணங்களான ஞானமின்மை, துக்கம், பெருத்தல், சுருங்குதல் முதலியன உன்னை அடையாமலிருக்கும் தன்மையை நினைக்க வல்லவர் யார்?

753. எம்பெருமான் ஆறு கருமங்களுக்கும் தலைவன். அச்செயல்களை மேற்கொள்ளத்தக்க ஆறு பருவங்களுக்கும் தலைவன். ஆறு யாகங்களாலும், ஐந்து வேள்விகளாலும், ஐந்து ஆகுதிகளாலும் ஆராதிக்கத் தக்கவன். ஐந்து அக்கினிகளை உடலாகக் கொண்டவன். மிக்க அதிசயத்தை உடைய ஞானம், விரக்திகளாகிற இரண்டையும் அளிக்க வல்லவன். அவற்றுக்குச் சாதனமான பரபக்தி, பரஞானம், பரமபக்திகளாகிய மூன்றையும் அளிக்க வல்லவன். விவேகம், விமோகம், அப்யாசம், கிரியை, கல்யாணம், அநவசாதம், அநுத்தர்ஷம் என்கிற ஏழு குணங்களுக்கும் தலைவன். ஞானம், சக்தி, பலம், ஐஸ்வரியம் (செல்வம்), வீரியம், தேஜஸ் என்கிற ஆறு குணங்களுக்கும் தலைவன்; மேலும் அப்பெருமான் பாப சம்பந்தமற்றவன், கிழத்தனமற்றவன், மரணமற்றவன், சோகமற்றவன், பசியற்றவன், தாகமற்றவன்; அடியார்களுக்கு ஏற்ற குண விபூதிகளை உடையவன். வேறு வேறு வகையான ஞான வழிகளை உண்டாக்கினவன்; உண்மை ஞானிகளுக்கு மெய்யன்; அல்லாதவர்க்குப் பொய்யன்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும் ஆன கோபால குலத்தில் வந்தவதரித்த மாயவனே!

754. எம்பெருமான் இருபத்து நான்கு தத்துவங்களுக்கும் தலைவன். அவையாவன: நிலம், நீர், தீ, காற்று, வானம் என்கிற பஞ்சபூதங்கள் ஐந்து; மெய், வாய், கண், மூக்கு, செவி - என்னும் அறிகருவிகள் (ஞானேந்திரியங்கள்) ஐந்து; வாய், கால், கை, எருவாய், கருவாய் - என்னும் தொழில் கருவிகள் (கர்மேந்திரியங்கள்) ஐந்து; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் - என்னும் நுண்ணிய பொருள்கள் (தன்மாத்திரைகள்) ஐந்து; மனம், முனைப்பு (அகங்காரம்) மான் (மகான்), விளக்கமில் பகுதி (அவ்யக்தம்) என்பவை நான்கு - ஆக வைணவத் தத்துவங்கள் இருபத்து நான்கு. இவற்றை நிர்வகிப்பவன் எம்பெருமான்.

755. மூன்று முப்பது ஆறினோடு ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆய்
மூன்று மூர்த்தி ஆகி மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்,
தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கம் இல் விளக்கமாய்,
ஏன்று என் ஆவியுள் புகுந்தது என் கொலோ? எம் ஈசனே.

756. நின்று இயங்கும் ஒன்று அலா உருக்கள் தோறும் ஆவியாய்
ஒன்றி உள் கலந்து நின்ற நின்ன தன்மை இன்னது என்று,
என்றும் யார்க்கும் எண் இறந்த ஆதியாய்! நின் உந்திவாய்
அன்று நான்முகற் பயந்த ஆதி தேவன் அல்லையே?

757. நாகம் ஏந்து மேரு வெற்பை நாகம் ஏந்து மண்ணினை
நாகம் ஏந்தும்! மாகம் மாகம் மாகம் ஏந்து வார் புனல்
மாகம் ஏந்து மங்குல் தீ ஓர் வாயு ஐந்து அமைந்து, காத்து,
ஏகம் ஏந்தி நின்ற நீர்மை, நின் கணே இயன்றதே.

758. ஒன்று இரண்டு மூர்த்தியாய் உறக்கமோடு உணர்ச்சியாய்,
ஒன்று இரண்டு காலம் ஆகி வேலை ஞாலம் ஆயினாய்!
ஒன்று இரண்டும் தீயும் ஆகி ஆயன் ஆய மாயனே!
ஒன்று இரண்டு கண்ணினானும் உன்னை ஏத்த வல்லனே?

755. (வடமொழியில்) முப்பத்து மூன்று மெய்யெழுத்துகளும், பதினாறு உயிர் எழுத்துகளும், ளகரம் முதலிய ஐந்து எழுத்துகளுக்கும் நீ நிர்வாகன். இருக்கு, யஜுர், சாமம் என்கிற மூன்று வேதங்களின் சொரூபி நீ; நான்கு மூன்றுகளாய்ப் பன்னிரண்டான 'ஓம் நமோ பகவதே வாசு தேவாய' என்கிற திருத்துவாதச அட்சரத்துக்கு நீ பொருளாய் இருப்பவன். அ, உ, ம - என்கிற மூன்று எழுத்துள்ள பிரணவத்தில் வாங்குகிற சோதி நீ என்றும், அழிவற்ற விளக்காகிய அகாரத்திற்குப் பொருளாய் இருப்பவன் நீ; என் சுவாமியே! நீயே உன் காரியமாக நினைத்து என் மனதில் புகுந்து உன்னை உள்ளவாறு காட்டிக் கொடுத்தது என்ன நீர்மை!

756. அசையாமல் நிற்கும் மலை முதலிய தாவரமாயும், அசையக்கூடிய பசு, பறவை முதலிய சங்கமமாயும் இருக்கிற பலவகையான உடல்கள் தோறும் ஆத்மாவாய்ப் பொருந்தி உள் கலந்து நிற்கிறாய். இப்படிப்பட்ட உன்னுடைய தன்மை இத்தகையதென்று எக்காலத்திலும் எப்படிப்பட்ட ஞானிகளுக்கும் சிந்திக்க முடியாதிருக்கிற ஆதிகாரண பூதனான நீ, உலகம் அழியும் காலத்திலே நான்முகனைப் பெற்ற முழுமுதற் கடவுள் அல்லையோ? இப்படிப்பட்ட பெருமையுடைய உன்னை அறிய வல்லவர் யார்?

757. ஆதிசேடனால் தாங்கப்பட்ட திருமேனியை உடையவனே! மேரு மலையாலே தாங்கப்படுகிற சொர்க்கலோகத்தையும், ஆதிசேடன் (அ) எட்டு யானைகள் தாங்குகிற பூமியையும், பரமபதம், ஆகாயத்தால் தாங்கப்படுகிற கங்கை, ஆகாயத்தால் தாங்கப்பட்ட மேக மண்டலம், வைச்வாநராக்கினி, பஞ்சவிருத்தி, பிராணன்கள், ஆகியவற்றை ஒரு பொருளே தாங்கிக் கொண்டு நிற்கிறதென்று உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டபடி தாங்கி நின்ற தன்மை உன்னிடத்தில் தான் பொருந்தி இருக்கின்றது. இத்தன்மையை யாவர் காணவல்லர்?

758. பெருமானே! நீ முக்கியமான விஷ்ணு மூர்த்தியாகவும், முக்கிய மில்லாத பிரம்மா, சிவன் என்கிற இரண்டு மூர்த்திகளாயும் இருக்கிறாய். அஞ்ஞானமாகிற உறக்கத்திற்கும், ஞானமாகிற விழிப்பிற்கும் நீயே தலைவன்; சத்துவம், இராஜசம், தாமதம் ஆகிய குணங்கள் நிறைந்திருக்கும் மூன்று காலங்களுக்கும் நீயே தலைவன்; கடலால் சூழப்பட்ட பூமிக்குத் தலைவனாய், மூன்று அக்கினிக்கும் (ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி) தலைவனாய் கோபாலனாக அவதரித்தவனே! ஆச்சரியமான வனே! ஞானம் அளிப்பவனான முக்கண்ணனும் உன்னை உள்ளவாறு அறிந்து துதிக்க வல்லனோ?

759. ஆதி ஆன வானவர்க்கும் அண்டம் ஆய அப்புறத்து
ஆதி ஆன வானவர்க்கும் ஆதியான ஆதி நீ
ஆதி ஆன வான வாணர் அந்த காலம் நீ உரைத்தி
ஆதி ஆன காலம் நின்னை யாவர் காண வல்லரே?

760. தாது உலாவு கொன்றை மாலை துன்னு செஞ்சடைச் சிவன்
நீதியால் வணங்கு பாத! நின்மலா! நிலாய சீர்
வேத வாணர் கீத வேள்வி நீதியான கேள்வியார்
நீதியால் வணங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே.

761. தன்னுளே திரைத்து எழும் தரங்க வெண் தடங்கடல்
தன்னுளே திரைத்து எழுந்து அடங்குகின்ற தன்மை போல்
நின்னுளே பிறந்து இறந்து நிற்பவும் திரிபவும்,
நின்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே.

759. உலக உற்பத்தி கர்த்தாக்களான பிரமன், தட்சப்பிரசாபதிகள், சப்தரிஷிகள், ஆதித்தியர்கள் ஆகியோருக்கும், காப்பாற்றும் பொறுப்பிலுள்ள இந்திரன், பதினான்கு மனுக்கள் ஆகியோருக்கும், அழிக்கும் பொறுப்பிலுள்ள சிவன், அக்கினி, இயமன் ஆகியோருக்கும் அண்டமென்று பெயர் பெற்ற பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் உலகக் காரணபூதர்களான நித்திய சூரிகளுக்கும், நீயே அதிபதி. உலக உற்பத்தி செய்பவர்களாய் மேலுலகங்களுக்குத் தலைவரான பிரமன் முதலியோருடைய முடிவுக்காலத்தை நீ அருளிச் செய்தாய்; பிரளயகாலத்திற்குத் தலைவனான உன்னை அறியவல்லவர் எவர்?

760. மகரந்தப் பொடி நிறைந்த கொன்றைப் பூ மாலையையும், சிவந்த சடையையும் உடைய சிவன் வேத விதிப்படி வணங்கும்படியான திருவடிகளை உடையவனே! நிர்மலனே! நிரம்பிய குணங்களை உடைய வைதிகர்கள், சாம கானம் மிகுந்த யாகங்களை நடத்துகிறவர்கள், மறை முறை வழுவாத கேள்வி அறிவுடையவர் (நினைப்பவர்) ஆகிய இவர்களால் மறை முறையாலே வணங்கப்படுகிற தன்மை உன்னிடமே உள்ளது.

761. அலை இன்றி ஓய்ந்து இருக்கும் கடலானது காற்று வீசுவதால் எங்கும் அலை எறிகிறது. காற்று நின்றதும் அந்த அலை எறிவு அடங்கிக் கடலானது அடங்கிவிடுகின்றது. அதுபோல, எம்பெருமானே! உன் சொரூபத்துக்குள்ளே தோன்றி அழியும் நிலை, அசையாமல் நிற்கும் மலை முதலிய தாவரப் பொருள்கள், அசையக் கூடிய சங்கமப் பொருள்கள் - இவை அடங்கிய உலகெல்லாம் உன் பக்கலிலே ஒடுங்குகிற தன்மை உன்னிடமே உள்ளது.

## வைணவ இலக்கியங்கள்

கி.பி 700 தொடங்கி ஏறக்குறைய 900 வரை சைவ சமய எழுச்சிக்கு இணையாகத் தமிழ்நாட்டில் வைணவ பக்தி இயக்கத்தை மக்களிடையே நடத்திக் காட்டிய பெருமை பன்னிரு ஆழ்வார்களைச் சாரும். ஒரு சில ஆழ்வார்கள் சைவ சமய ஆசாரியர்களுக்கு முன்னரே தம்

மதத்தைப் பரப்ப முனைந்துள்ளனர். திருமால் வழிபாடு, தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க நூல்களில் பாராட்டப் பட்டுள்ளதை நாம் காணலாம். எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் திருமாலைத் தலைமையாகக் கொண்ட வைணவ வழிபாடு, பன்னிரு ஆழ்வார்களின் பக்திப் பாடல்களால் மறுமலர்ச்சி பெற்றது. இவ்வாழ்வார்கள் 108 வைணவத் தலங்களைப் பாடியுள்ளனர். கோயில்கள் தோறும் சென்று இறைவனை இசைபாடித் தொழுதுள்ளனர்.

இவர்களுடைய அருட்பாக்களைத் தொகுத்து "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" எனப் பெயரிட்டுள்ளனர். திவ்யபிரபந்தத்தையும், அதன் சிறப்புப் பொருளையும் தமிழ் உலகிற்குத் தந்துதவிய பெருந்தகையார் நாதமுனிகள் ஆவர். மடல், மாலை, அந்தாதி போன்ற பிரபந்த வகைகளும், பிற்காலப் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களும் இப் பாடல்களில் பயின்று வரக் காணலாம். இந் நூலில் உள்ள பாக்கள், தேவாரப் பாடல்களைப் போன்று கனிந்த மொழியையும், எளிய நடையையும் கொண்டு விளங்குவனவாகும். ஆழ்வார்கள் அனைவரையும், அவர்கள் வாழ்ந்து மறைந்த கால வரிசைப் படி காண்போம்.

## பன்னிரு ஆழ்வார்கள்

### 1. பொய்கையார்

இவர் காஞ்சிபுரத்தினர். ஆங்கமைந்த பொய்கை ஒன்றில் தாமரை மலரில் இவ் வாழ்வார் தோன்றி யமையால், இவ் ஆழ்வாரைப் பொய்கையாழ்வார் என அழைப்பர்.

இவர் பாடிய பக்திப் பாடலின் பெயர், முதல் திருவந்தாதியாகும்; அப்பாடல்களுள் ஒன்று காண்க.

**வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய**

சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.

2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரம் என்னும் திருக்கடல் மல்லையூரினர். "பூதம்" என்ற சொல் பாடல்களில் வருமாறு பாடிய காரணத்தால் இவருக்கு இப் பெயர் வந்ததென்பர்.

இவர் பாடிய பக்திப்பாடலின் பெயர், இரண்டாம் திருவந்தாதியாகும். அப் பக்திப் பாடல்களுள் ஒன்று:

**அன்பே தகளியா யார்வமே நெய்யாக**
**இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய் – நன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்.**

3. பேயாழ்வார்

மயிலாப்பூரைச் சேர்ந்தவர்; பக்திப் பரவசத்தால் நெஞ்சம் சோர்ந்து கண் சுழன்று, அழுது, சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தாற்போல் இறைவனைத் தொழுது மகிழ்ந்ததாலே இவர் இப் பெயர் பெற்றார்.

இவர் பாடிய பக்திப் பாசுரம், மூன்றாந் திருவந்தாதி யாகும். இவர் பாடிய பாடல்களிலே ஒன்று:

**பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும்; ஐந்து**
**நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா – விருப்புடைய**
**வெஃகாவே சேர்ந்தானை மெய்மலர்தூய்க் கைதொழுதால்**
**அஃகாவே தீவினைகள் ஆய்ந்து.**

இவர் மூவரும் ஒரு காலத்தினர். இதனால், இம் மூவரையும் "முதல் மூன்று ஆழ்வார்கள்" என அழைப்பர்.

4. திருப்பாணாழ்வார்

உறையூரினர். இழிகுலத்தில் பிறந்த இவர், இசைபாடுவதிலே வல்லவர். ஆலயத்திற்குள் செல்ல உள்ளம் இன்றிக் காவிரியாற்றின் கரையிலே நின்று திருவரங்கநாதனை நோக்கித் தேனொழுகப் பாடினார். இவரைப் பக்தர் என்று பாராமல் இழிகுலத்தினர் என்று இவர்மேல் கற்களை எறிந்தனர். பண்பாடும் பக்தன் புண்படுவதைக் கண்ட திருவரங்கநாதன், தன் நெற்றியிலிருந்து குருதிகொட்டச் செய்தான். தூயவர் ஒருவர் கனவிலே தோன்றி, அத் தொண்டரை ஆலயத்திற்குத் தோளில் சுமந்துவரப் பணித்தான். திருவரங்கநாதனின் அழகுருவைக் கண்ட திருப்பாணாழ்வார், மையல் கொண்டவராய் உள்ளத்தைப் பறிகொடுத்து 'அமலனாதி பிரான்' என்ற பதிகம் ஒன்றைப் பாடினார். இஃது உள்ளத்தைக் கவரும் திருவரங்க நாதரின்மேல், மங்கை ஒருத்தி காதல் கொண்டதாகப் பாடப்பட்ட பக்திச் சுவை நூலாகும். எளிமையான வெளிப் பாட்டையும், ஆழமான உணர்ச்சிப் பெருக்கையும் உடைய நூலாகும்.

அவர் மாலின்மேல் கொண்டிருக்கும் மையலைப் பாருங்கள்!

**கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை**
**அண்டர் கோன் அணி அரங்கன்என் அமுதினைக்**
**கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே.**

5. திருமழிசை ஆழ்வார்

தொண்டை நாட்டிலுள்ள திருமழிசை என்னும் ஊரினர். சைவத்திற்குத் திருமூலர் போன்று வைணவத்திற்குத் திருமழிசை ஆழ்வாராவார். திருச் சந்த விருத்தமும், நான்முகன் திருவந்தாதியும் இவர் இயற்றிய நூல்களாகும்.

"உன்னையன்றி நானில்லை. என்னையன்றி நீ இல்லை என நாரணனை எண்ணி, என் தொழிலெல்லாம் உன்னைத் தொழுவது; பொழுதெல்லாம் உன்னைப் புகழ்வதே" **எனக்** கூறுகின்றார். "வாழ்த்துக வாய்; காண்க கண்; கேட்க செவி; தாழ்த்துக தலை" என

இறைஞ்சுகின்றார். திருமாலைக் காணவல்லார் யார்? என்ற வினாவிற்குத் திருமழிசை ஆழ்வார் கூறும் விடையைப் பாருங்கள்:

ஒன்றி நின்று நல்த வம்செய்து
ஊழி ஊழி தோறெலாம்
நின்று நின்று அவன்கு ணங்கள்
உள்ளி உள்ளம் தூயராய்
சென்று சென்று தேவ தேவர்
உம்பர் உம்பர் உம்பராய்
அன்றி எங்கள் செங்கண் மாலை
யாவர் காண வல்லரே.

6. நம்மாழ்வார்

இவரைச் 'சடகோபர்' என்றும் கூறுவர். பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்தவர். ஆழ்வார்களுள் தலைசிறந்தவராவர். திரு ஆசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்ற நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இந் நான்கு நூல்களையும் வைணவர்கள் தங்கள் மதத்திற்குரிய சதுர் வேதங்களெனப் போற்றிப் பேணுவர். இவற்றுள் திருவாய்மொழி மிகச் சிறந்த நூலாகும்.

சைவத்திற்கு மாணிக்கவாசகர் போன்று வைணவத்திற்கு நம்மாழ்வார் ஆவார். "நம்மாழ்வார் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ, மட்டும் உரியவர் அல்லர். அவர் எல்லா நாட்டிற்கும், எல்லாச் சமயத்தார்க்கும், எல்லா இனத்தார்க்கும் உரியவர். எல்லோரும் 'நம் ஆழ்வார்' என்று போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ் நாட்டை மனத்தால் நினைக்கிறேன். வாயால் வழுத்துகிறேன்; கையால் தொழுகிறேன்'' என்கிறார் திரு.வி.க. நம்மாழ்வார், தம்மையும் பிறவற்றையும் இறை இயல்பாகக் காணும் மனப்பாங்கினர்.



பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமல ரென்றும் காண்டோறும் – பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான்உரு வே.

என்று நம்மாழ்வார் உளங்கசிந்து உரைக்கிறார். ஒன்றிய திங்களைப் பார்த்து, "ஒளி மணிவண்ணனே" என்றும், நின்ற குன்றத்தினை, "நெடுமால்" என்றும், நன்றுபெய் மழையை "நாரணன் வருகை" என்றும், பக்தி மையல் கொண்டு பாடும் இயல்பினர். இவ்வாறு இவர் இயற்கையைப் பார்த்து, இறைவனை நினைந்து, தம் உளங்கசிந்து வழுத்தும் திருவாக்குகள், படிப்பவர் உள்ளத்தைக் குழையச் செய்வனவாகும். இவருடைய பாடல்களின் சிறப்பைக் கண்ணுற்ற பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மொழிக்குச் சிறந்த உரையொன்று எழுதியுள்ளார்.

7. மதுரகவியாழ்வார்

இவர் நம்மாழ்வாரின் சீடராவர். நம்மாழ்வாரைப் பற்றிக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' எனப் பாடிப் பெயர் பெற்றவர்.

திருமாலைக் கூடப் பாடாது, நம்மாழ்வாரையே தாம் கண்ட கடவுளாகப் பாடுகின்றார். அன்னையாக, அத்தனாகத் தம்மை ஆளும் தன்மையாகத் தம் ஆசிரியரைக் காணுகின்றார்.

தேவுமற்று அறியேன்; குருகூர்நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே.

எனப் பரவுகின்றார்.

8. பெரியாழ்வார்

இவரை 'விஷ்ணுசித்தன்' என்றும், 'பட்டர்பிரான்' என்றும் அழைப்பர். பாண்டி நாட்டினர்; ஸ்ரீ வில்லிப்புத்தூர் என்னும் ஊரினர். பூமாலையோடு, இறைவனுக்குப் பாமாலை கட்டுவதிலும் பெரு விருப்புக் கொண்டவர்.

'பெரியாழ்வார் திருமொழி' 'திருப்பல்லாண்டு' என்ற இரு நூல்களை இயற்றியுள்ளார்.

கண்ணனுடைய குழந்தைப் பருவத்தைப் பிள்ளைத் தமிழ் நூலாகப் பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ் இலக்கியத்திற்கு இவருடைய நூல் முதல் தொடக்கமாகும். குழந்தை உணர்ச்சியைச் சித்திரிப்பதில் பெரியாழ்வார் ஒரு கைதேர்ந்த கவிஞர். குழந்தையைத் தொட்டிலில் இடுகிறார்கள். தொட்டிலோ! துணித்தொட்டில்! குழந்தையும் தூங்கவில்லை. குழந்தையையே கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள் யசோதரை. இடுப்பில் வைத்து அணைத்து, "என்னடா கண்ணா என்னை இந்தப் பாடு படுத்துகிறாய்?" என முணுமுணுக்கிறாள். "தொட்டிலில் கிடக்க விட்டாலோ, தொட்டிலைக் காலால் உதைத்துக் கிழித்துவிடுகிறான். மெத்தென்றிருக்கும் இந்தச் சின்னஞ் சிறிய கால் வலிக்குமே என்று ஒக்கலில் வைத்துக் கொண்டால், அங்கிருந்து நழுவி இடுப்பை முறித்துவிடுகின்றான்; ஐயோ! நமக்கே இப்படி வலிக்கிறதென்றால், குழந்தைக்கு எப்படி வலிக்குமோ, என்று வலிய ஆசை தீர அணைத்துத் தழுவிக் கொண்டாலோ, வயிற்றிலே பாய்ந்து உதைக்கின்றான். இவ்வாறு குழந்தைக்கு ஈடு கொடுக்கும் சக்தி இல்லாமையால் நான் எவ்வாறு மெலிந்து போனேன் பாரடி" என்று தோழியைப் பார்த்துக் கூறுவது போல் பெரியாழ்வார் பாடும் பாட்டு, அவருடைய கற்பனைத் திறத்தையும், கவிதையுள்ளத்தையும் நன்கு எடுத்துக் காட்டுவதாகும்.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்!



## 9. ஆண்டாள்

பெரியாழ்வார் வளர்த்த பெண்பிள்ளை என்பர். இவர் அணிந்த மலர்மாலையை இறைவன் மனமுவந்து ஏற்றதால் இவரைச் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்ற சிறப்புப் பெயராலும் அழைப்பர்.

இறைவனைக் காதலனாகவும், தம்மை அவர் காதலியாகவும் பாவித்து, 'நாச்சியார் திருமொழி, திருப்பாவை' என்ற இரு நூல்களைக் காதற்சுவை ததும்ப நெஞ்சு நெக்குருகிப் பாடியுள்ளார். இவருடைய பக்திப் பரவசம் பாக்களிலே உணர்ச்சிப் பெருக்கெடுத்து ஓடுதலைக் காண்கிறோம். பன்னிரு ஆழ்வார்களுள் சிறப்புடைய ஒருவராக இவர் பெரிதும் பாராட்டப் படுகிறார்.

இக் கோதை நாச்சியார் 'பெரியாழ்வார் கவிதை உள்ளத்தின் படைப்பே' என்று, ஆண்டாள் கவிதையைச் சிலர் சித்தாந்த உட்பொருளாக விளக்குவர். ஆனால், ஆண்டாளுடைய நடையில், இளமை மணம் வீசுகிறது; காதலின் புதுமை பொலிகின்றது; பள்ளமடையில் பாயும் வெள்ளம் போல் உணர்ச்சிப் பெருக்கு, பொங்கி நுரைத்து விழுகின்றது; பெரியாழ்வாரின் வாக்கிலோ, முதிர்ந்த அனுபவமும், அபூர்வ எளிமையும், சோகம் கலந்த அன்பு முதிர்ச்சியும் வெளியாகின்றன. ஆண்டாளின் பக்திக் காதலோ, கரைபுரண்டோடும் காதல் வெள்ளமாகும்; பெரியாழ்வாரின் பாடல்கள் தூய அமைதி வாய்ந்த அன்புக் கடலில் விளைந்த பக்தி அனுபவக் கொத்துக்களாகும்; ஆனால், ஆண்டாளின் பாடல்களோ அலைபட்ட காதல் பெருங்கடலின் அலைகள்! சுழிகள்! நீரோட்டங்களாகும். எனவே, ஆண்டாள் பெரியாழ்வாரின் கற்பனைப் படைப்பல்லர்; உயிரோடு வாழ்ந்து மறைந்த ஓர் ஆழ்வார் மங்கையே ஆவர்.

இவர் பாடிய "திருப்பாவை" நூலில், மார்கழித்திங்கள் மதி நிறைந்த நல்நாளில் நேரிழையாரையெல்லாம் நீராட அழைக்கின்றார்.

புழைக்கடைத் தோட்டத்து வாவியுள், கழுநீர் மலர்ந்து விட்டது; வியாழமும் உறங்கிவிட்டது; எல்லே! இளம்கிளியே! இன்னம் உறங்குதியோ? என்று, மணிபதித்த மாடத்தில தூபம் கமழ துயில் அணைமேல், கண் வளரும் மாமன் மகளை மணிக் கதவம் திறக்க அழைக்கின்றாள்.

அந் நாளில், ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி நீர் ஆடினால், நாடெல்லாம் தீங்கின்றித் திங்கள் மும்மாரி பெய்யும்; செந்நெல் வயல் ஊடே, கயல் உகளும்; நீலோற்பல மலரிலே, வண்டுகள் தேனருந்தித் திளைக்கும்; வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பசுக்களையுடைய நீங்காத செல்வத்தைப் பெறலாம் என்று, கன்றை நினைத்துக் கனைக்கக் கண்பார்க்கும் நிலமெல்லாம் பால் சுரந்து நனைக்கும், வளமார்ந்த பசுக்களையுடைய ஆயர்குல மகளைக் குள்ளக் குளிர, குடைந்து நீர் ஆட அழைக்கின்றாள்.

இவ்வாறு இறைவன் பேர் பாடி நீர் ஆடினால் பெறும் பரிசிலையும் கூறுகின்றார்;

**கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்**
**பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச்**
**சூடகமே, தோள்வளையே; தோடே, செவிப்பூவே,**
**பாடகமே, என்று அனைய பல்கலனும் யாம் அணிவோம்**
**ஆடை உடுப்போம்; அதன் பின்னே பாற்சோறு**
**மூடநெய் பெய்து முழங்கை வழிவார**
**கூடிஇருந்து குளிர்ந்தேல் ஓர் எம்பாவாய்!**

"மானிடவர்க்கு என்று பேச்சுப் படில் வாழகில்லேன்" என்ற மனவுறுதியோடு வாழ்ந்த ஆண்டாள், மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத, முத்துடைத் தாமநிரை தாழ்ந்த பந்தற்கீழ், கண்ணனே வந்து தம் கைத்தலம் பற்றக்கனவு கண்டதாகக் கூறும் பாடல்கள், அவருடைய ஆழ்ந்த அன்பு வெள்ளத்தைக் காட்டு வனவாகும்.

குழல் அழகர், வாய அழகர், கண் அழகர், கொப்பூழில் எழு கமலப் பூ அழகராகிய அரங்கநாதர், கழல்வளையைக் கழன்று விழும் வளையாக்கிவிட்டாரே என வருந்தி வார்த்தையாடுவது, அவருடைய மையல் உள்ளத்தைப் பறையறிவிப்பதாகும்.

## 10. திருமங்கையாழ்வார்

கொள்ளையடித்து வாழ்ந்துவந்த கள்ளர் குலத்தைச் சார்ந்தவர். நாகப்பட்டினத்திலுள்ள பொன்னாலாகிய புத்த விக்கிரகத்தை உடைத்து ஸ்ரீரங்கம் கோயில் மூன்றாம் சுற்று மதிலைக் கட்டியதாகக் கதை கூறுவர். பெரிய திருமடல், திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, பெரிய திருமொழி, சிறிய திருமடல் என்ற ஆறு பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார்.

காவியை வென்ற கண்ணாரிடமே, என் ஆவியை இழந்த பாவியாய் இருந்தேன்; ஆனால், குலம் தரும் நலம் தரும், நல்ல சொல்லை, இப்போது நான் கண்டு கொண்டேன்! பெற்ற மக்கள் பெண்டிரைப் பிரிந்தேன்; "இவர் பின் உதவாது" என்பதை அறிந்தேன்; அருள் என்னும் வாளால் ஐம்புலன்களையும் எறிந்து, செறித்தேன் நின் அடிக்கே! என்று சேவிக்கின்றார்.

"காயோடு நீடு, கனியுண்டு வீசு, கடுங்கால் நுகர்ந்து, நெடுங்காலம் ஐந்து, தீயோடு நின்று, தவம் செய்ய வேண்டாம்" என்று கூறுகின்றவர், இறைவனை எய்தும் வழியையும்,

**பொய்வண்ணம் மனத்து அகற்றிப்**
**புலன் ஐந்தும் செலவைத்து**
**மெய்வண்ணம் நினைந்தவர்க்கு**
**மெய்ந்நின்ற வித்தகன்**

தோன்றுவான் எனக் காட்டுகின்றார்.

### 11. தொண்டரடிப்பொடி யாழ்வார்

விப்ர நாராயணர் என்ற மற்றொரு பெயரும் இவருக்குண்டு. திருவரங்கநாதனுக்குத் தினந்தோறும் மாலை சாத்த, ஆலயத்தில் தோட்டம் அமைத்து, மலர்ச்செடிகளை வளர்த்து வந்தார். அங்கு 'தேவ தேவி' என்ற விலைமாதின் வயப்பட்டுத் தம் வாழ்நாளைக் கழித்தார். பின்னர் அக் கள்ளம் கரைய உள்ளம் உருகிப் பாடிய பாக்கள்தாம் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி நூல்களாகும். இவர் இயற்றிய திருப்பள்ளியெழுச்சி, மாணிக்க வாசகரின் திருப்பள்ளியெழுச்சி நூல் போன்று கவிதை நயமும், இயற்கை எழிலும் நிறைந்ததாகும்.

"பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்" என்ற புகழ்மிக்க பக்திப் பாடலைப்பாடிய ஆழ்வார், 'மெய் எல்லாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு, பொய் எல்லாம் பொதிந்து கொண்ட பொய்யனேன்; பொய்யனேனே; என் மனத்தில் ஓர் தூய்மை இல்லை; வாயில் ஓர் இன்சொல் இல்லை; பொழுதெல்லாம் போது கொண்டு, உன் பொன்அடி புனைய மாட்டேன்; தீதிலா மொழிகள் கொண்டு, உன் திருக்குணம் செப்பமாட்டேன்; காதலால் நெஞ்சம் அன்பு கலந்திலேன்; ஆகையால், ஏதுமற்றேன் என்பதோடு,

**ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவர் இல்லை;**
**பாரிலேநின் பாத மூலம் பற்றினேன்; பரம மூர்த்தி**
**கார்ஒளி வண்ண னேஎன் கண்ணனே கதறு கின்றேன்**
**ஆர்உளர்? களைகண் அம்மா! அரங்கமா நகருளானே!**

என்று, இறைவனை நோக்கி அலறுகின்றார்.

### 12. குலசேகராழ்வார்

இவர் சேரநாட்டினர். சிம்மாசனத்தைத் துறந்து வைணவத் தொண்டர் கோலத்தை மேற்கொண்ட பெரியோர். தமிழும் வட மொழிப் புலமையும் வாய்ந்த கவிஞர் ஆவார்.

தமிழில் பெருமாள் திருமொழி என்ற நூலையும் வட மொழியில் முகுந்தமாலை என்ற நூலையும் இயற்றி-யுள்ளார்.

இவர் பாடிய அருட்பாடலிலே ஒன்று:

**தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை**
**விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே,**
**அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்**
**அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே**

மேற்கூறிய மூவரும் ஒரு காலத்தினர்.

மேற்கூறிய பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களைத் திரட்டி 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' என்ற பெயரால் வழங்கியுள்ளனர். இப் பாடல்களுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றை, 'உரையாசிரியர்கள் தொண்டு' என்ற தலைப்பிலே காண்க.

* * *